**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**O.S. 32/2020**

**Date : 22.01.2026**

**பி. வா.சா. 1 - சேவியர் புஷ்பராஜ்**

**Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873.**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

வழக்கின் வாதி என்னுடைய உடன் பிறந்த சகோதரர் என்றால் இனி இல்லை. வழக்கின் வாதி பிறக்கும் போது என்னுடன் தான் பிறந்தார் என்றால் இல்லை. எனது தாயார் பெயர் என்ன என்றால் ஜயனிஸ். வழக்கு பட்டிகை செத்தின் விஸ்தீரணம் என்ன என்றால் 14½ சென்ட். வழக்கு பட்டிகை சொத்து எனது தாயார் ஜயனிஸ்க்கு உரிமைப்பட்டது என்றால் சரிதான். எனது தாயார் எந்த ஆண்டு காலஞ்சென்றார் என்றால் சுமார் 15 ஆண்டுகள் இருக்கும். தாயார் இறக்கும்வரையில் வழக்கு பட்டிகை சொத்து எனது தாயார் பெயரில் தான் இருந்தது என்றால் சரிதான். 2004 ம் வருடத்தில் எனது சகோதர, சகோதரிகள் ஜேசுமரிய ரோசாலி, அன்னம்மாள் மற்றும் ஜேசு பன்னீர்செல்வம் ஆகியோர் சேர்ந்து கூட்டு அவகாச பத்திரம் எழுதிக்கொடுத்தார்கள் என்றால் சரியல்ல ஜேசுதாசன் என்ற அண்ணனும் செல்வராஜ் என்ற அண்ணனும் சேர்ந்து எழுதிக்கொடுத்தார்கள். வா.சா.ஆ.5 தான் மேற்படி ஆவணம் என்றால் சரிதான்.

வழக்கு பட்டிகை சொத்தில் எத்தனை பங்கு என்னுடையது என்றால் முழுவதுமாக என்னுடையது தான். மேற்படி கூட்டு அவகாச விடுதலை பத்திரத்தின் அடிப்படையில் தான் வழக்கு பட்டிகை சொத்தில் முழு அவகாசம் கோருகிறேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ல் ஜேசுமரிய ரோசாலி, அன்னம்மாள் மற்றும் ஜேசு பன்னீர்செல்வம் ஆகியோர் கையொப்பம் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ல் 3 ம் பக்கத்தில் வாரிசு கிரமபடியும் அவகாச வழியிலும் மக்களால் எங்களுக்கும் தங்களுக்கும் மற்றும் கே. ஜேசுமரிய செல்வராஜ் மற்றும்

கே. ஏசுதாசன் ஆகியவர்களுக்கும் கூட்டாய் பாத்தியப்பட்டு மேற்படி சொத்தை நாங்களும் தாங்களும் மேற்படி கே. ஜேசுமரிய செல்வராஜ், கே. ஏசுதாசன் ஆகியவர்களும் சர்வசுதந்திரமாய் கைவசம் வைத்து அனுபவித்து ரெவன்யூ தீர்வை செலுத்தி வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

வா.சா.ஆ.5 ல் 3 ம் பக்கத்தில் இதன்படி இதன் தபசில் விபரித்த சொத்தில் எங்களுக்கு பிரிவின்றி 3/6 பங்கு கூட்டு அவகாசமும் தங்களுக்கு பிரிவின்றி 1/6 பங்கு கூட்டு அவகாசமும் மேற்படி கே. ஜேசுமரிய செல்வராஜ், கே. ஏசுதாசன் ஆகியவர்களுக்கு பிரிவின்றி 2/6 பங்கு கூட்டு அவகாசமும் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 ல் வழக்கு பட்டிகை சொத்து குறித்து குறிப்பிட்டுள்ள பகுதிகள் அனைத்திலும் பிரிவின்றி என்று குறித்து தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல முழுவதுமாக எனக்கு உரிமைப்பட்டது என்பதால் பிரிவின்றி என்று வராது. வா.சா.ஆ.5 க்கு பின் வழக்கு பட்டிகை சொத்து சம்மந்தமாக எவ்வித ஆவணமும் பதியப்படவில்லை என்றால் தேவையில்லை. வா.சா.ஆ.2 வில்லங்கசான்றிதழில் கூட்டு அவகாசிக்கு கைவிடும் பிரிவின்றி 3/6 பங்கு என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

வழக்கு பட்டிகை சொத்தில் கடந்த 04.02.2020 ல் வழக்கு பட்டிகை சொத்திற்கு சென்று இடங்களை திருத்தி விற்பனை செய்ய முயற்ச்சித்தேன் என்றால் சரியல்ல. வேறுஏதேனும் கலகட்டத்தில் நான் வழக்கு பட்டிகை சொத்தை விற்பனை செய்ய முயற்ச்சித்தேனா என்றால் இல்லை. நான் கடந்த 04.02.2020 ல் வழக்கு பட்டிகை சொத்திற்கு சென்று இடங்களை திருத்தும் பெயரில் வாதிக்கு அவகாசப்பட்ட பங்கையும் சேர்த்து திருத்தி எனக்கும வாதிக்கும் உள்ள இடத்தின் நடுவல் உள்ள மண்சுவரை இடித்து அத்துமீறி மொத்த சொத்தையும் விற்பனை செய்வதற்கு ஒரு போர்ட் வைத்தேன் அது

வா.சா.ஆ.3 ல் காணப்படுகிறது என்றால் சரியல்ல அவ்வாறு போர்ட் வைக்கவும் இல்லை அது பற்றி எனக்கு தெரியாது.

வழக்கு பட்டிகை சொத்தின் புகைப்படத்தை நீதிமன்றத்தில் வாதி தாக்கல் செய்தது போல் தானும் தாக்கல் செய்யலாமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்கு பட்டிகை சொத்து சம்மந்தமான எனது பெயரிலான வருவாய் ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி எவ்வித ஆவணமும் எனது பெயரில் முறையாக இல்லாத காரணத்தினால் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்து சம்மந்தமாக ஏதேனும் வருவாய் ஆவணங்கள் எனக்கு கிடைத்திருந்தால் அது சட்டத்திற்கு முன்பு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்தின் சாலையில் இருந்து ஒரு பகுதி வழக்கின் வாதிக்கு என்று ஒதுக்கப்பட்டிருந்தது என்றால் சரியல்ல. சகோதரர்களில் யார்யாருக்கு எந்தெந்த பங்கு வரும் என்று சொல்ல முடியுமா என்றால் கூற இயலாது. வழக்கு பட்டிகை சொத்து சம்மந்தமாக பாகபிரிவினை வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கு பட்டிகை சொத்து சம்மந்தமாக எவ்வித தனிப்பட்ட சுவாதீனமும் அது வாரிசுகளுக்கிடையே பிரிவு செய்யப்படாத நிலையில் நான் கோர இயலாது என்றால் சரியல்ல வழக்கு பட்டிகை சொத்து முழுவதும் எனது பெயரில் தான் உள்ளது. வழக்கு பட்டிகை சொத்து முழுவதும் எனது பெயரில் தான் உள்ளது என்பதற்கான ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் என்னிடம் உள்ளது தாக்கல் செய்யலாம்.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**